IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF SULUR

(DEPOSITION OF WITNESS: வாசா.1

Solemnly affirmed and sworn by Tmt. R.Lakshmi, Junior Assistant on 12.10.2023 is accordance with the provision of Act X of 3331

அசல் வழக்கு எண். 703/17

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஏ.லெனின் கணேஷ் | தாலூக்கா | சூலூர் |
| தந்தை பெயர் | ஆறுமுகம் | ஊர் | ஒண்டிப்புதூர் |
| தொழில் | | மதம் | |
| வயது | | | |

வாசா1 ஆக 12.10.2023 அன்று ஆஜராகி முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் நீதிமன்ற ஆணையர் , நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னுடைய அறிக்கை மற்றும் வரைபடம் சர்வேயர் வரைபடம் நீமசாஆ.1 முதல் 3.

வாதிதரப்பு விசாரணை

எனக்கு நீதிமன்ற வாராண்டில் வழக்குச் சொத்தை சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்து இயற்கை அறிக்கை பணிக்க தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு நகல் நான் அளவீடு செய்யும்முன் படித்துப்பார்த்தேன். மனுப்படி தான் அளவீடு செய்தேனா என்றால் நீதிமன்ற வாராண்டில் என்ன குறிப்பிடப்பட்டிருந்தோ அதன் படி அளவீடு செய்யப்பட்டது. சர்வேயர் உடன்இருந்தார். சர்வேயர் உதவியுடன் வாராண்டில் இருந்த சொத்து விவரத்தை நான் அளவீடு செய்தேன். எனது மாதிரி வரைபடத்தில் வழக்கு சம்மந்தப்பட்ட சந்து அளவுகள் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. சர்வேயர் வரைபடத்தில் சந்தின் அளவு குறிப்பிடப்பட்டுள்ளது. என்னுடைய வரைபடத்திற்கும் சர்வேயர் வரைபடத்திற்கும் ஒத்துக்போகிறதா என்றால் சரியாகத்தான் உள்ளத. என்னுடைய வரைபடத்தில் நான் திசைகள் குறிப்பிடவில்லை. புல எண். 21 க்கு பின்புறம் தென்வடலாக சந்து இருந்ததா என்றால் இருந்தது. அதை என்னடைய வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேன். சர்வேயர் வரைபடத்தில் 21 மற்றும் 20 புல எண்ணிற்கு மேல்புறம் சந்து இருந்தது. அவருடைய வரைபடத்தில் குறிப்பிடவில்லை

மற்றும் அந்த சந்தின் நீள அகலங்கள் சர்வேயர் வரைபடத்தில் குறிப்பிடவில்லை. என்னுடைய வரைபடத்திலும் மேற்படி சந்தில் நீள அகலம் குறிப்பிடவில்லை. என்னுடைய அறிக்கையிலும் சந்தின் அகலம் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 1/2 அடி என குறிப்பிட்டுள்ளேன். நான் குறிப்பிட்டுள்ளது தவறு என்றும் மேற்படி சந்து 3 முதல் 5 அடி இருக்கும் என்றும் நான் அதை குறிப்பிடாமல் வந்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி வீட்டிற்கு வடபுறமும் 3,4 பிரதிவாதிகளின் தென்புறமும் இருந்த சந்து 1/2 அடி என நான் எப்படி குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆரம்பத்தில் 1/2 அகலம் போகப்போக 1 1/2 அடி அகலம் இருந்தது. இந்த விவரத்தை எனது அறிக்கையில் சொல்லவில்லை. ஒரு நபர் சென்று வரும் அளவிற்கு அந்த சந்து அகலமாக இருந்தது. சர்வேயர் வரைபடத்தில் சில முக்கிய குறிப்புகள் அளவுகள் குறிப்பிட்டு இல்லை என்றால் சரிதான். என்னுடைய வரைபடத்திலும் குறைகள் உள்ளது என்றால் சரிதான். மீண்டு ம் சரியாக அளந்து அறிக்கை வரைபடம் தாக்கல் செய்ய நான் தயாராக உள்ளேன்.

மறுவிசாரணை இல்லை.

Sd/ ஏ.லெனின் கணேஷ்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

N RENUGA
Digitally signed by N RENUGA
Date: 2023.10.13 13:04:42 +0530

District Munsif,

Sulur.